தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 22, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 ஏப்ரல் 5, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்"

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால் உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

*[***குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]*

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் இரத்தினகிரி கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடப்பட்டு வங்கதேசத்தினுடைய தீவிரவாதிகள் அங்கே ஊடுருவியிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இரண்டுபேர் ஜெலட்டின் குச்சிகளோடு*

கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக தங்களிடம் நான் ஏற்கெனவே சட்டப் பேரவை விதி 56-ன்படி கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசால் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Next.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 56-ன்படி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். அதை... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அது ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) திரு. வே. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள்.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் 489 சாயப்பட்டறைகளைச் சேர்ந்தவர்கள் 2-ஆம் தேதி முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றுதான் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, சொல்லுங்கள்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், உபரி ஆசிரியர்களுக்குச் சம்பள பாக்கி

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 190-க்கும் மேற்பட்ட உபரி ஆசிரியர்களுக்கு ஒன்பது மாதமாக உபரி ஆசிரியர் என்ற காரணத்தால் சம்பளம் வழங்கப்படவில்லை; போராடிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம், பதற்ற நிலை இருக்கிறது. அதைக் கொஞ்சம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

(இ) ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உண்ணாவிரதம் இருந்தவர்கள் கைதானது

திரு. ஜி.கே. மணி: தருமபுரியில், இலட்சியக் குடும்பங்கள் என்று சொல்லி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம்